# சங்கநாதம்



சங்கம் 1 நாதம் 1

தைமாதம் 1984

இதழாசிரியர்

— கார்மேகம் நந்தா —

# சங்க நாதம்

சங்கம் 1 நாதம் 1

தை மாதம் 1984

- ஆசிரியர் -

**கார்மேகம் நந்தா**

- ஆலோசனைக் குழுவினர் -

E. S. உலகநாதன் (B.Com)
கவிஞர் கலைவாதி கலீல்
வசந்தி சிவகுமார் (B. A.)
அருட்சீலி டயஸ், (L. L. B.)

— எழுத்தாளர் குழு —

பஹ்மி ஹலீம்தீன்
நந்தினி லோறன்ஸ்
ஜவாகர் ஜோதி
நித்தியகலா முருகையா

— ஓவியங்கள் —

கலைவாதி கலீல்
செந்தில் வேந்தன்
மொகமட்
S. மனோகரன்

வெளியீடு:-

**தமிழ் இளைஞர் சம்மேளனம்**
**தலைமன்னார்துறை.**

அச்சிடுவோர்:-

விவேகானந்தா பிறின்ரேஸ்
லிமிட்டெட், யாழ்ப்பாணம்


## உங்களுடன் ஒரு நிமிடம்...

அன்பின் இலக்கிய விரும்பிகளே முதற்கண் நூல் இலக்கியத்துறையில் அடியெடுத்து வைக்கும் சின்னவன் எனது பணிவன்பான வணக்கங்கள்.

தங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் "சங்கநாதம்" தமிழேடு இளம் இலக்கிய படைப்பாளர்களுக்கும் இலக்கிய விரும்பிகளுக்கும் ஒரு வரப்பிரசாதம். இதன் வளர்ச்சியும் மலர்ச்சியும் உங்கள் கைகளையே நம்பி நிற்கின்றது.

ஆகவே உங்கள் ஆக்கங்களையும், ஆதரவுகளையும், எம் இதழுக்குத் தந்து ஊக்கம் ஊட்டுவீர்களாக.

"எங்கும் முழங்குக சங்கநாதம்
எல்லோர் கைதவழட்டும் சங்கநாதம்"

— ஆசிரியர் —

**கார்மேகம் நந்தா**

# கவிக் கதம்பம்

இப்பகுதியை இம்முறை எமது "சங்க நாதம்" இதழ் வெளியீடு பற்றி வந்து சேர்ந்த முக்கவிதைகள் அலங்கரிக்கின்றன.

## செந்தமிழாலே ! வாழ்த்துகின்றேன்

இளைய தலைமுறையின்
இலக்கிய தாகத்தினால்
பிரசவமாகின்றுள். சங்க
நாதமெனும் ஓர் குழவி
இலக்கிய நெஞ்சங்களின்
இதய தாகமதைத் தணித்து
இவளை உருவாக்க வேண்டும்
எண்ணில்லாப் படைப்பாளிகளை
மதித்து
சங்க நாத வெள்ளம்
கங்கையாகப் பாய்ந்து
நம்மை நீராட்ட வேண்டும்
நாமும் பாராட்ட வேண்டும்
மழை காலத்து நீர்க்குமிழி
என ஆகாது பெரும்
மலையதில் ஏற்றிய ஒளிச்
சுடராக திசையெங்கும்
ஒளிபரப்பி சிறப்போடு வாழ்க
வென
செந்தமிழாலே வாழ்த்துகிறேன்.

செல்வி
ரன்ஜனி சரவணமுத்து
தலையாழி கிழக்கு

## சாற்றுகின்றேன் வாழ்த்துக்களை

பொங்கிப் பொதிகையிலே
வங்கக் கடல் நோக்கி
தங்கு தடையின்றியே
தவழ்ந்து வந்த செந்தமிழை
மங்காமல் உய்ய வைக்க
சங்க நாதமெனும் பெயரில்
சாரமான இலக்கியமாய்
சமுதாயத்தின் கண்முன்னே
சமர்ப்பிக்க முனைந்தமைக்கு
சாற்றுகின்றேன் வாழ்த்துக்களை

கவிஞர் கலீம்தீன்
கல்ஹின்னை

# தமிழ் வாழ வேண்டும்

சங்கநாதமது எழுந்தாக வேண்டும்
சங்கமமாகியது விரைவாக வேண்டும்
பங்கமுறும் சமுதாயம் சமமாக வேண்டும்
பாங்கான எமதாட்சி தான் தோன்றவேண்டும்
எங்கெங்கும் வெண்கொடுமைதான் மாயவேண்டும்
ஆங்காங்கு மெய்யன்பு தான் மேவவேண்டும்
அகங்கார ஆளுமைகள் அழிந்தொழிய வேண்டும்
பொங்கிவரும் பொதுவாழ்வு பொலிவாக வேண்டும்
எங்களது என்று அதை நாம் பேண வேண்டும்
தங்கு தடை தான் இழந்து தனியாக வேண்டும்
பொங்கு கடல் கூடவே புகழ் பாட வேண்டும்
எங்கும் நிறை பொதுவாக தமிழ் வாழவேண்டும்

— கவிஞர் மதுராந்தகன்
திருமலை

இருமுனைக் கதை

# இலட்சியத்தை நோக்கி

— எழுதியோர்: விக்னு செல்வநாயகம், ஜனகமகள் சிவஞானம் —

நான்கு நாட்களாகப் பெய்துகொண்டிருந்த மழையைத் தாக்குப் பிடிக்க முடியாமல் அந்த வீட்டுக் கூரையின் ஓட்டை ஒடிசல்களுக்குள்ளிருந்து சொட்டுச் சொட்டாய் சிந்திக் கொண்டிருக்கும் மழை நீரை ஏந்தும் நோக்குடன் சட்டி, பானை என்று ஒவ்வொரு பாத்திரமாய் ஒழுகுகின்ற இடத்திற்கு வைத்துவிட்டு நிமிர்ந்த கலாவுக்கு இடுப்பு வலித்தது. இதிலை கொஞ்சநேரம் இருக்கலாம் என்று நினைத்தவளுக்கு ஐஞ்சு நிமிஷம் களைப்பாறப் பார்த்தால் ''ஐஞ்சு ரூபாவை இழக்க வேண்டி வருமே', என்ற தூண்டுதலால் வீட்டின் தாழ்வாரத்தில் தாயும் தமக்கையும் இடித்துப் போடும் மாவை வறுப்பதற்காக அவர்கள் இருக்கும் இடத்தை அடைந்தாள்.

மழைக் குளிரோடு பனிக் குளிரும் சேர்ந்து கொள்ளவே அந்தக் குளிரைத் தாங்கும் திரணியற்றவனாய் தாயின் கிழிந்து கந்தலாய்ப்போன சீலையொன்றினால் இறுக்கிப் போர்த்தபடி தமக்கையின் ஒவ்வொரு செய்கையையும் நோட்டம் விட்டவாறு விளக்கின்முன் குந்தியிருந்த சேகரின் அடிமனதிலிருந்து ஏக்கப் பெருமூச்சொன்று வெளிவந்தது. இன்னும் ஒரு சில நிமிடங்களுக்குள் அணைந்து விடுவேன் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்த அந்த விளக்கின் முன் அமர்ந்த சேகரிற்கு படிப்பில் மனம் பதிய மறுத்தது ''கடவுளே இண்டைக்கெண்டாலும் கொஞ்சம் வெய்யில் எறிச்சுதெண்டால் இந்த உடுப்புக்களெல்லாத்தையும் தோய்ச்சுப் போடலாம். எல்லாரிட்டையும் இரண்டு நாளிலை தாறதெண்டு சொல்லி வாங்கி வந்தன் '' தாயைத் தொடர்ந்தாள் மூத்தமகள் இந்திரா '' அதுக்கு நாங்க என்ன செய்யிறதம்மா ? இஞ்சை பெய்யிற மழை அவயின்ரை வீட்டையும் பெய்யுதுதானே ''. தாயும் தமக்கையும் கதைத்துக் கொண்டவை சேகரின் காதுகளில் முட்டி மோதி ஒலித்தது அந்த மங்கிய ஒளியில் குடிசையை நிமிர்ந்து பார்த்தான். மூலையில் மலைபோல் குவிந்து கிடக்கும் உடுப்பு மூட்டையே அவன் கண்களில் தெரிந்தது. தொடர்ந்து அங்கிருக்கப் பிடிக்காதவனாய் வெளியே எழுந்து சென்றவன் அங்கே தாயும் தமக்கைமாரும் விடிந்தும் விடியாத அந்தக் காலைப்பொழுதில் குளிரையும் பொருட்படுத்தாமல், மழைத் துளிக்கு நாங்கள் எந்த வகையிலும் சளைத்தவர்களல்ல என்று கூறுமாப் போல் முத்து முத்தாகச் சிந்தும்

வேர்வைத் துளிசளையும் பொருட்படுத்தாமல் ஒருவர் மாறி ஒருவராக மா இடித்துக் கொண்டிருந்த அந்தக் காட்சி நெஞ்சத்தை வேதனையால் பிழிந்தெடுத்தது. தாயும் தமக்கைமாரும் படும் கஷ்டங்களை ஒப்புக்காக "இப்பிடிக் கூலி வேலை செய்து நீங்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டாம்" என்று அவன் அடிக்கடி கூறிக்கொள்கிற போதிலும் அவர்கள் வியர்வை சிந்தி ஐந்தோ பத்தோ என்று உழைக்கும் பணத்தால் தான் ஒரு நேர வயிற்றை யென்றாலும் நனைக்க முடிகிறது என்ற உண்மையையும் அவன் உணராமல் இல்லை.

முதல் நாள் அடித்த பலத்த காற்றினால் முற்றத்தில் விழுந்து கிடந்த தென்னங் குற்றியின் மேல் குந்தியிருந்து கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த படியிருந்த சேகரின் மனத்தில் வாழ்க்கைப் பிரச்சனைகளும், போராட்டங்களும் பூதகரமாய் விரிந்து நின்று இன்னும் சில மாதங்களில் பட்டதாரி என்ற பெயருடன் பல்கலைக்கழகத்தை விட்டு சேகர் வெளிவந்தாலும் அவனின் பின்னால் ஒட்டிக்கொண்டிருக்கும் அந்த வாயில்லாப் பட்டம் தனது உடனடித் தேவையை நிறைவேற்ற உதவ மாட்டாதென்பதையும், அதனைக் காற்றில் பறக்க விட்டு விளையாட்டுப் பார்ப்பதிலேயே காலம் கடந்துவிடும் என்பதையும் அவன் நன்கறிந்திருந்த போதிலும் அந்த உயர்படிப்பை மேற்கொண்டதிற்கு காரணம் இல்லாமல் இல்லை. தினம் தினம் ஊராரின் ஆடை அழுக்குகளை கழுவுவதின் மூலம் வரும் ஊதியத்தைக் கொண்டு வயிற்றைக் கழுவி வாழும் தன் குடும்பத்திற்கு தன்னால் ஆகவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றதென்பதையும் சேகர் அறிவான். எனினும். இத்தனைக்கும் மேலாக உயர் வர்க்கத்தினர் என தம்பட்டம் அடித்துத்திரிவோர் தம் சாதித் திமிரால், பணத்திமிரால் தாழ்ந்த சாதிக்காரரென மற்றையோர்களை அடக்கி, ஒடுக்கி அடிமைகளாக நடத்த முனையும் அவர்களுக்கு ஒருபாடம் படிப்பிக்க வேண்டுமென்ற ஆக்ரோஷ வெறியே அவனுள் மேலோங்கி நின்றது. அன்று அவனுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருக்கின்றதென்பதை அறிந்த போது உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக்கொள்வோரின் உள்ளங்கள் கொதித்த கொதிப்புத்தான் எவ்வளவு "ஏன்டா சேகர் உனக்கு படிப்பு அவசியமா? கொம்மாவைப்பார் வயது போன காலத்திலையும் உடுப்பு மூடைகளை வீடுவீடாகச் சுமந்து சுமந்தே கூனலாகிப் போயிட்டாள். கொம்மாவுக்கு ஆறுதல் குடுத்திட்டு நீ அந்த வேலையைச் செய்தால் என்ன. ஒரு சிலரின் போலியன்போடு கூடிய பொருமை நச்சரிப்புகள் இவை. "உங்கடை வண்ணரத்தொழிலை செய்யிறதை விட்டுட்டு ...... படிப்பு ஒரு கேடா?

உங்கடை உங்கடை சாதியிலை ஆரும் ஐஞ்சாம் வகுப்புக்கு மேலை படிச்சிருக்கினமோ? உனக்குத்தான் Varsity ப் படிப்பு வேண்டிக் கிடக்கு. போடாப் போ ஒழுங்காய் உன்ரை தொழிலைச் செய்." உள்ளக் கொதிப்போடு இன்னும் சிலர் கூறிய அதிகார வார்த்தைகள் இவை. இவற்றையெல்லாம் அன்று அவன் தாயிடம் கூறிய போது அவள் கூறியவை இன்றும் அவன் மனதில் பதிந்திருக்கின்றது "தம்பி அவையள் எல்லாரும் எரிச்சலிலைதான் அப்படிச் சொல்லுகினம். எங்கடை சாதிக்குள்ளை ஒருவராதல் இவ்வளவுக்குப் படிக்கவில்லை. நீயாவது படிச்சு எங்கடை சமூகத்திற்கு வழிகாட்டு. என்ரை வாயைக்கட்டி வயித்தைக்கட்டி உன்னை படிக்க வைப்பன். நீ படிச்சு முடிச்சு உன்ரை குடும்பத்தையும் சமூகத்தையும் நல்லபடியா வாழவைப்பாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு மோனை" அந்தத் தாயின் நம்பிக்கையை ஆசை அபிலாசைகளை நிறைவேற்றி வைப்பேனா? என்ற கேள்வியை இன்று சேகரின் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. அக்காமார் இருவரையும் என்னால் நல்லபடியா வாழவைக்க முடியுமா? தனக்குள்தானே கேட்டுக் கொண்டான். தாங்க முடியாத சுமையால் இடிந்து விழும் சுமைதாங்கியாய் அவனிருக்க இத்தனையும் போதாதென்று - பவானி என்றவளின் குறுக்கீடு ஏன் அவள் என் வாழ்வில் வந்து குறுக்கிட்டாள்? நான் ஏன் அவளை காதலித்தேன். போராடும் மனதுடன் மாரடித்துக் கொண்டிருந்தவன் " என்ன தம்பி இவ்வளவு நேரமும் உதிலை குந்தியிருந்து கொண்டு என்ன செய்கிறாய் என்ற குரல் கேட்டு தன்நிலை வரப்பெற்றான். இருள் நிறைந்த நெஞ்சத்தின் ஒரு மூலையிலாயினும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுத் தெரியாதா என்ற ஆதங்கத்தோடு இருள்கவிந்த அந்த வான வெளியில் ஒளியை அவன் கண்கள் சுழன்றன.

II வாழ்க்கைச் சுழலின் வேதனைகள் வெறுமைகள் யாவும் சேகரின் மனதைப் புண்படுத்தியிருந்ததுண்மை. அந்த வேதனைகளுக்கெல்லாம் அவ்வப்போது ஆறுதல் கூறி அவனைப் படிப்பில் அக்கறை கொள்ளச் செய்கையில் முதலில் இதுவெல்லாம் என்ன? என்று புரியாவிட்டாலும் காலப்போக்கில் அதன் அர்த்தங்கள் சேகருக்குப் புரிந்துவிட்டது. அக்கணப்பொழுதில் ஏதோ? இனம்புரியாத உலகினை நோக்கி எங்கோ? எங்கோ? உயர உயரப் பறப்பது போன்ற பிரமை அவனுக்கு இன்பம் என்றால் என்ன? என்று அறியாமல் இதுவரை காலமும் வாழ்ந்தவனுக்குப் பவானியின் அன்பான பேச்சு ஆவலானதும், அரவணைப்பானதுமான பார்வை எல்லாமாகச் சேர்ந்து அவனைக் கற்பனையுலகில்ச் சஞ்சரிக்க வைத்தது. இருப்பினும் இத்தகைய கனவுகள் எல்லாம் நிஜமாகுமா? என்ற சந்தேகம் அவனுக்குள் எழாமலில்லை அதனை வாய்விட்டுப் பவானியிடம் சேகர் கேட்டே விட்டான்.

"பவானி வசதிகள் வாய்ப்புகளெல்லாம் நிறைந்தவள் நீர் எதுவுமே? இல்லாத ஏழை நான் நம்முடைய அன்பு வாழ்வு நிலைக்குமா? இல்லை அஸ்தமித்துப் போய்விடுமா? பவானி "இதென்ன? சேகர் அபசகுணம் மாதிரிப் பேசுறியள்" எனக்கென்னவோ? பயமாயிருக்கு" உங்கடை நெஞ்சிலை அன்பிருக்கு. நம்பிக்கையிருக்கு எங்கள் இரண்டு பேருக்கும் படிப்பு இருக்கு நாங்கள் நினைத்தால் எதுதான்? செய்யமுடியாது அத்தனை தன்னம்பிக்கையோடு அவள் தலை நிமிர்ந்து நிற்கையில் தான் ஆண் பிள்ளை பின்வாங்கினுல் அதுதன் ஆண்மைக்கே இழுக்கென நினைத்தவன் அவள் அன்பு வலைக்குள்த் தான் ஆனந்த வாழ்க்கையினை அடைக்கலமாக்கிக் கொண்டான்.

காலச்சக்கரத்தின் வேகத்தில் வாழ்க்கை வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் சேகருக்கு இறுதியாண்டுப் பரீட்சை அண்மித்துக் கொண்டிருந்தது. படிப்பில் முழுமனதாய் ஆழ்ந்துபோனதால் சேகர் பவானியை ஒருவாரமாய்ச் சந்தித்துப் பேசமுடியவேயில்லை அந்தப் பிரிவின் நெருடல் அவன் இதயத்தில்க் கீறலாய் வலித்ததுண்மை இருந்தும் படிப்பில்க் கவனம் திரும்பியதில் அந்த வேதனைகளைச் சேகர் சற்று மறந்திருந்தான். மாலைவேளை பகல் முழுவதும் படித்த அலுப்புத்தீரச் சற்றுக் காலாற நடக்கலாம் என்ற நினைவோடு எழுந்து வெளியேவருகிறுன் சேகர். கதவோரம் வெறுமையான நிலத்தில் அமர்ந்திருந்த தாயை, ஒருமுறை ஏறிட்டு நோக்குகிறுன் அவள் பார்வை எங்கோ? வெறித்திருந்த போதிலும் தாயின்விழிகளிலிருந்து வழிந்த கண்ணீர் கன்னத்தில்க் கோடிட்டிருந்தது கண்டு திகைத்துப் போனுன் சேகர் "அம்மா ஏனம்மா? அழுறியள்" "............" அவள் எதுவுமே? பேசாது மௌனியாகவே இருந்ததில் மீண்டும் அதையே சேகர் திருப்பிக் கேக்கிறுன். "நம்பியிருந்தவன் நட்டாற்றில்க் கைவிட்டால் அழாமல் வேறை என்டா? செய்யிறது" குரல் வந்த திசையில்த் திரும்பிப்பாக்கிறுன் சேகர் ஆக்கரோசமாய் மொழிந்தவள் அவன் அக்கா இந்திரா. அக்கா நீங்கள் என்ன? சொல்லுறியள்" இந்த மாதிரிக் கஷ்டப்பட்டு வாயைக் கட்டி வயித்தைக் கட்டி நாங்களுன்னைப் படிப்பிக்க, நீ படிக்கிறன் படிக்கிறனெண்டு காதல்ப்பாடமே? படிக்கிறுய் போடா நம்பிக்கைத் துரோகி ராஸ்கல் அம்மா இரடி இந்திரா" எங்களை நீங்கள் அடக்கி வையுங்கோ அவனை ஒருவார்த்தை சூடாய் கேளுங்கோ பார்ப்பம்" மௌனமாய்த் தலை குனிந்து அழுகின்ற அம்மாவைப் பார்க்க அவனுக்குச் சங்கடமாகவே இருந்தது எவ்வளவு பொறுப்புகள் வீட்டிலை இருக்கு இதுகளைப் பற்றி எள்ளளவாவது உனக்கு சிந்தனை வேண்டாம் சீ! நீயும் ஒரு சகோதரனே? எங்களோடை நீ கூடம்பிறந்தநேரம்

பிறக்காமலே இருந்திருந்தால் ஒரு ஆண் சகோதரம் இல்லையே எண்டு ஒரு கவலையோடை இருந்திருப்பம்.''

கோபமாய்க் கத்தி விட்டு அக்கா உள்ளே போய்விட்டாள் அதன்பின் வீட்டில் எவருமே? அவனுடன் பேசவில்லை அம்மா மட்டும் பெத்தகடனே என்று சாப்பாட்டைக் கொண்டு வந்து அவன் முன்னுல் வைப்பாள் பசியில்லாவிடினும் வயித்துக்கு உணவுபோக வேண்டுமே என்ற கடமைக்காக அவனும் சாப்பிடுவான் தன்னை தன் செயல்களை எல்லாம் அவன் சீர்தூக்கிப் பார்க்காமலில்லை. இருந்தும் எல்லாரும் ஏதோ? கொலைக்குற்றவாளியை நோக்குவதைப் போல்ப் பார்ப்பதாகவே அவனுக்குப்பட்டது: அதில் அவன் நெஞ்சம் சதா வெதும்பிக் கொண்டேயிருந்தது படிப்பில்க் கூட அவ்வளவாக மனம் செல்லவில்லை;

சில சமயங்களில் தாய், சகோதரிகள், ஏழ்மை, வெறுமை என்று தன்னைச் சூழ்ந்து கொண்டுள்ள விலங்குகளை உதறித்தள்ளி விட்டுப் பவானியோடு ஓடிவிடுவோமா? என்று கூட மனம் பரபரக்கும் சீ! என்ன? மனமிது குரங்காய்த் தாவித், தாவித் தத்தளிக்கின்றதே? என்று வெறுப்பும் விரக்தியுமான உணர்வும் அவனைக் குடைந்தெடுத்து. எந்த முடிவானுலும், பவானியோடு மனம் விட்டுப் பேசி எடுப்பது என்ற எதிர்பார்ப்போடு அவளைத் தேடி வருகுமுன் சேகர் பலவித சிரமத்தின்பின் ஒருவாறு அவளைச் சந்தித்து விட்டான் பவானியின் முகத்திலும் ஒருவித சோகம் ஒரு வேளை பிரிவின் பிரதிவிம்பமோ? என்னவோ? எனச் சேகர் தனக்குள்ளாக எண்ணமிட்டுக் கொண்டான். ''என்ன பவானி ஒரு மாதிரி இருக்கிறீர்'' அதெல்லாம் இருக்கட்டும் முதல்ல நீங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கோ நான் படிக்கவேணும்'' ''வந்து பவானி நீர் நினைக்கிறமாதிரிப் பேசக்கூடிய விஷயமில்லை நாங்கள் ரண்டு பேரும் மனம் விட்டுப் பேசவேண்டிய நிலையிலை இருக்கிறம்'' எதுக்காகப்? பேசவேணும்'' ''பவானி! உங்கடை சாதி என்ன? அந்தஸ்த்தென்னண்டு தெரியாமல் பழகிட்டன் இதிலை என்னிலை பிழையில்லை நீங்களாய்ச் சொல்லியிருக்கலாம் ஆனுல் அதை நீங்கள் செய்யேல்லை போகட்டும் நாங்கள் வெறும் நண்பர்களாகவே இருந்திடுவம் நான் போறன்'' இத்தனை நாளாப் பழகிய பவானி ஜாதியை இழுத்துப் பேசியதைக் கூட அவன் பெரிதாக நினைக்கவில்லை. பலநாட்களாய் வளர்த்த உறவை ஒரு விஞடிகள் முறித்துக் கொண்டு போகையில் இதயம் பலமாய் வலித்தது இருந்தும் பத்து மாதம் சுமந்து பெற்ற தாயினதும் கூடப் பிறந்த சகோதரிகளினதும் உறவைத் தூக்கியெறிய நினைத்த தனக்குக் கிடைத்த சரியான தண்டனையே என மனம் சொன்ன

பொழுதிலும் இதயத்தின் ஒரு மூலையில் ஒரு சோககீதம் ஒலித்துக் கொண்டேயிருந்தது. இருந்தும் தன்னை நம்பியிருக்கின்ற தாய், சகோதரிகளின் ஒளிமயமான எதிர்காலத்தினை உருவாக்குவதே இனிமேல்த் தன் இலட்சியம் என்ற மன வைராக்கியத்தை தனக்குள்ளாக வளர்த்துக் கொண்டவன் அந்த இலட்சியத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

( கற்பனை )

---

( 2 )

## துளையுண்ட இதயம்

இளமை ஓடத்தின்
காதல் துடுப்புக்களை
வலித்துச் சென்று
அவளின் மன ஆற்றில்
அன்புக்கரை காண
எண்ணினேன் ஆனால்
கரையில் நின்றவளோ
பிரிவு அம்பை எய்து
ஓடத்தையும்; கூடவே
என் இதயத்தையும்
துளைத்தாளே !

(3)

## நாணம்

நிலவு மங்கையவள்
மேகப் போர்வையினால்
தன் அழகை ஏனோ
மறைத்துக் கொண்டாள்
காரணம் கேட்டதற்கு
தன் காதலன் இங்கே
வையம் மீதிருந்து தன்னை
வைத்த கண் மீட்காமல்
நோக்குவதால் தனக்கு
நாணம் வந்ததென்றாளே

கத்தான்குடி டி. எம். சபைர்கான்

நன்றி;

04-10-1983

தொடர் பேட்டி

# ஈழத்து இசைக் கலைஞர்களுள் என்னைக் கவர்ந்தவர்கள்

(இப்பகுதிக்காக "அவள் ஒரு ஜீவநதி" திரைப்பட இசையமைப்பாளர் M. S. செல்வராஜாவை சந்திக்கின் றேன்.)

அண்மைக் கலவரங்களால் அமைதியின் போர்வைக் குள் குடிகொண்டிருக்கும் கொழும்பு–10 மருதானை பகு தியில் அமைந்துள்ள ஓர் இரட்டை மாடிக் கட்டிடம் எங் கிருந்தோ தவழ்ந்து வருவதுபோல் இனிமையான ஆர் மோனிய இசை காற்றில் கலந்து என் காதுகளை தழுவு கின்றது. ஒரு கணம் யோசித்துவிட்டு வாயிற் கதவை தட்டுகின்றேன். யான் யாரைப் பேட்டிகாணச் சென் றேனோ அவரே கதவைத்திறந்தபடி இன்முகத்துடன் வரவேற்கின்றார்.

நிரு : பேட்டியை ஆரம்பிக்கலாமா ஐயா ?

செல்வ : தேனீர் அருந்திவிட்டு ஆரம்பிக்கலாமே. (தமிழருக்கே உரிய உபசரிப்பு பண்போடு தேனீர் கோப்பையை என்வசம் நீட்டுகின்றார்.)

நிரு : ஈழத்து இசைத்துறைக்கு நியாயமான பங்களிப் புகளை வழங்கி அமைதியாக கலைப்பணியாற்றி வரும் தாங்கள் இவ்விசைத் துறையில் ஈடு பட்ட தெப்போது ? ஈடுபட ஏதுவாக இருந்தவர்கள் யார் ?

செல்வ : இத்துறையில் நான் ஈடுபட்டது ஏறக்குறைய பத்துவயதில் என நம்புகின்றேன். இத்துறையில் நான் புகுவதற்கு காரணமாக இருந்தவர் என் றால் என்தந்தையின் நண்பர் ஒருவர் தான்.

நிரு : தாங்கள் இந்த இசைப் பயிற்சிகளை யாரிடம் அல்லது எந்தக் கல்லூரியில் பெற்றுக்கொண் டீர்கள் ?

செல்வ : ஆரம்ப காலத்தில் பத்து வருடங்கள் வரை ஓர் சங்கீத ஆசிரியரிடமும் அதன்பின் அரச இசைக் கல்லூரியிலும் பின்னர் வட இந்தியா வின் பிரசித்திபெற்ற இசைக் கல்லூரியான " லக்னுவ் " இசைக் கல்லூரியிலும் முறை யான இசையறிவினைப் பெற்றேன்.

நிரு : பல நூற்றுக் கணக்கான பாடல்களுக்கு இசை யமைத்து வானொலி தொலைக்காட்சி மேடை நிகழ்ச்சிகளில் பல நேயர்களை சந்தித்துள்ள தாங்கள் அவர்கள் மூலம் பெற்ற அனுபவம் ஏதும் உண்டா ?

செல்வ : அப்பாடா எத்தனையோ கூறலாம் சுருக்கமாக ஒன்றை சொல்வதானால் நம் நாட்டில் உரு வாகுகின்ற தமிழ் பாடல்களையும் தென்னிந் திய பாடல்களின் தரத்திலேயே எதிர்பார்க்கின் றார்கள். ஆனால் உண்மையில் எமது பாடல்கள் உருவாகின்ற சூழ்நிலைகளையும் தென் இந்திய பாடல்கள் உருவாக்கப் படுகின்ற சூழ்நிலையினை யும் அவர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை.

நிரு : இசைத்துறையில் நீண்ட காலமாக ஈடுபாடு கொண்டுள்ள தாங்கள் அத்துறை மூலம் சந் தித்த மறக்க முடியாத சம்பவம் ஏதுமுண்டா ?

செல்வ : நான் ஆசிரியனாக சங்கீதத்துறையில் இடம் பிடித் துக் கொண்டது அவள் ஒரு ஜீவநதி திரைப் படத்திற்கு நான் இசையமைத்தது. இவை இரண் டும் என் வாழ்வில் மறக்கமுடியாத சம்பவங்கள்.

நிரு : அவள் ஒரு ஜீவநதி திரைப்படத்திற்குப் பின் ஈழத்து தமிழ் திரைப்படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்பு தங்களுக்கு கிட்டவில்லையா ?

செல்வ : எத்தனையோ வாய்ப்புகள் காத்திருக்கத்தான் செய்தன. ஆனால் ஈழத்து தமிழ்த் திரைப்பட தயாரிப்பில் ஏற்பட்ட ஸ்தம்பிதம் அவ்வாய்ப்புகளை நழுவச் செய்துவிட்டது.

நிரு - உங்களுக்குப்பின் இப்பணியைத் தொடர தங்கள் குடும்பத்தவர் யாரை ஏனும் தயார் படுத்தியுள்ளீர்களா ?

செல்வ : என் குடும்பத்தவர்கள் என் இசையை இரசிப்பவர்களாக இருக்கின்றார்களேயன்றி இசைத்துறையில் ஈடுபடுவதற்காக எவ்வித பயிற்சியையும் பெறவில்லை. ஆனால் என் வாரிசுகளாக ஈழத்தில் பல கலைஞர்களை உருவாக்கிவிட்டேன்.

( கலாவதி, முத்தழகு இவரின் வழித்தோன்றல்களே.)

நிரு : ஐயா இசைத்துறையில் ஓரளவு முதிர்ச்சி பெற்ற தாங்கள் வளரும் கலைஞர்களுக்கு சங்கநாதம் சார்பில் கூறும் ஆலோசனை என்ன ?

செல்வ : ஒரு கலைஞன் கலைத்துறையில் ஈடுபடும்போது ஒருவரைப் பின்பற்றி அத்துறையில் ஈடுபடமுனையலாம். ஆனால் எந்தக் கலைஞரைப் பின்பற்றி ஒருவர் கலைத்துறையில் புகுந்தாரோ அந்தக் கலைஞராகவே தான் மாறிவிட நினைக்கக்கூடாது. உண்மையான ஒரு கலைஞன் தனக்கு என ஒரு பாதையினை அமைத்து அதன் வழி இயங்க முனைதலே பாராட்டுதலுக்கு உரியது.

நிரு : இக்கட்டான இந்தக் கால கட்டத்தில் சிரமம் பாராது இப்பேட்டியை தந்தமைக்கு நன்றி வணக்கம்.

செல்வ : தொலை தூரம் இருந்து வந்து தலைமன்னார் துறை இலக்கிய வெளியீடான சங்கநாதம் இத ழுக்காக என்னைப் பேட்டி கண்டமைக்கு தங்க ளுக்கும் என் நன்றிகள்.

பேட்டி அமைப்பு : ஜவாகர் ஜோதி
சந்திப்பு : கார்மேகம் நந்தா

அடுத்த இதழில் இப்பகுதியை அலங்கரிப்பவர்
ஈழத்து இளம் இசையமைப்பாளர் திரு மோகன்ராஜ்

---

## தாலியா ? வேலி ?

ஜன்னலோரம் நின்று
ஜாடையிலே சிரித்தவள்
இன்று கண்டாளே
முறைக்கின்றாள்
கண்வழி புகுந்து
காதலை விதைத்தவள்
கதைத்திட மறுக்கின்றாள்
இதற்கெல்லாம் காரணம்
வேறொருவன் அவள்
கழுத்தில் விலங்காக
வேலியாக இட்டு விட்ட
தாலியாம்.

எழுதியவர்
**"கவிதா பிரம்மன்"**

# மாறியது நெஞ்சம்

— ஒலுவில் அமுதன் —

குமாருக்கு தன் வாழ்க்கையை நினைக்க நினைக்க வேதனை தான் திரண்டது.

வாழ்க்கை என்றால் மனைவி, பிள்ளை என குடும்பமும் குதூகலமாக வாழலாம் என்பதுதான் அப்போது அவனின் கற்பனையாக இருந்தது. இப்போதைய நிலையில் குடும்ப வாழ்க்கை நரக வேதனை என்பதை உணர்கின்றான்.

நேற்று அவன் தலைவலியால் அவதிப்பட்டபோது மனைவி லலிதாவோ நாவல் ஒன்றில் மூழ்கிப்போயிருந்தாள். திருமணம் செய்வதற்கு முதல் என்றால் " என்ற மகனே ..... மகனே " என அன்பு மழை பொழிந்து கவனிப்பாள் தாய் " மகனே வலி அதிகமா " கேட்போர் தந்தையும் பூட்டனும் " அண்ண மருந்து எடுத்து வாங்க " அன்புக் கட்டளை இடுவார்கள் தங்கைகள், ஆனால் மனைவியாக வந்தவளோ அவன் வேதனைகளை அறிந்தும் அறியாதவளாய் நாவல் பார்ப்பதிலேயே கரிசனை காட்டுகின்றாள். இதனை எண்ணி எண்ணி அவனது கண்கள் நீரைக் கொட்டின. கற்பனை நெஞ்சில் விரிந்தன.

என் நண்பர்கள் எத்தனைபேர் மனைவிகளுடன் இன்ப வாழ்க்கை வாழ்கின்றார்கள். அதுபோல் நானும் வாழலாம் என்று கனவு கண்டேனே! பஞ்சை நெருப்பு எரிப்பது போல் என் மனைவி என்னை வார்த்தை நெருப்பால் எரிக்கின்றாள். நெருப்புப் போன்ற வார்த்தை கேட்டு என் நெஞ்சம் படும் வேதனை யாருக்குத் தெரியும்?.

பெற்றவர்களுக்கு இவற்றையெல்லாம் சொல்லப் போனால் லலிதாவின் வாழ்க்கை முற்றுப்பெறும். " குமார் என்டா கடுமையான சிந்தனை " என செல்வராஜா கேட்டபோது சுய நினைவிற்கு வந்தான் குமார். செய்து முடிக்கவேண்டிய நடைமுறைக் கணக்கு பற்று வட்டிகளைத் தயாரிக்கத் தொடங்கினான். அவன்தான் அந்த வங்கியிலே நீண்ட கால அனுபவம் உடைய இலிகிதரும் காசாளரும் ஆவான். அவன் பத்து நிமிடத்தில் செய்யும் வேலையே இன்னொருவர் செய்வதென்றால் அரை மணியோ அல்லது அதற்கு மேலோ பிடிக்கலாம். அவனின் திறமையை முகாமையாளர் பாராட்டி பேசியிருக்கின்றார். குமார் அன்று வேலை முடிந்து

வீட்டிற்கு வந்து சேரும்போது இரவு எட்டுமணியாகி இருந்தது. கோப்பிக்காகப் படுத்திருந்தான் குமார். சிறிது நேரம் படுத்தவனுக்கோ சாய்வு நாற்காலியில் கிடைத்தது ஏமாற்றம் தான். மனைவி லலிதாவோ அவன் செய்கைகளை பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஆவேசமாக அன்றுதான் அவன் பேசினன் என்று சொல்ல வேண்டும். அமைதியாக இருந்து வந்தவன் மனைவி தலைக்குமேல் போய்விட்டதை நினைந்து தாறுமாறுகப் பேசினன். வாய்க்கு வந்ததெல்லாம் பேசிப் பழக்கப்பட்ட லலிதா சும்மா இருப்பாளா? தனது நீளமான வாயினுல் கணவன் என்றும் பாராமல் நாய், பேய் என கீழ்த்தரமான வார்த்தைகளினுல் பேசினுள். அவளின் பேச்சினுல் குமாரின் தன்மான உணர்ச்சி விம்மிப் புடைத்தது.

இப்படியான வார்த்தைகளை கேட்ட பின்பும் இவளுடன் வாழவேண்டுமா? பெற்ருேரிடம் இவளின் நடத்தையைச் சொல்லி இருந்தால் இவளின் வாழ்க்கை எப்போதோ முடிந்திருக்கும். என்னை ஒரு கணவனுக நினைத்திருந்தால் இப்படியொரு வார்த்தை பேசவராதே! என்னில் குற்றம் இருந்தாலும் பரவாயில்லை. வங்கி என்பதையும் மறந்து குமார் நடந்து முடிந்த நிகழ்ச்சி அலைகளுக்குள் தத்தளித்தான்.

சமைப்பதையும் தருவதையும் எனக்கு பெரிய புண்ணியம் செய்வதாக பேசுவதென்றுல் எவ்வளவு இழிவாக என்னைக் கருதுகின்ருள்? ஒரு கணவனுக்கு பணிவிடை செய்வதை எவ்வளவு பாக்கியமாக கருதுகின்ற பெண்களும் வாழும் உலகத்தில் என் மனைவி லலிதா எவ்வளவு இழிவான மனநிலையைக் கொண்டவளாக இருக்கின்ருள்!.

"குமார் வா டீ குடிக்கப் போவோம்" அவனின் நண்பன் முத்துவேல் அழைத்தபோது சிந்தனை கலைந்தான் குமார். அன்று முழுவதும் சிந்தனையோடும், கவலையோடுமே சிரமத்தின் மத்தியில் குமார் வங்கி வேலைகளில் ஈடுபட்டான்.

அன்று அவன் வீட்டிற்கு திரும்பியபோது லலிதா ஏதோ புறுபுறுத்தபடி "சீதனம் நான் தராவிட்டாலும் உனக்கு வேலை செய்கின்றேன், கஸ்டப்பட்டு சமைத்துத் தருகின்றேன்" "அப்படியென்றுல் மற்றப் பெண்களெல்லாம் வீட்டில் வேலை செய்யாமல் பூதங்களாகவா இருக்கிருர்கள்"? விடாமல் பதிலடி கொடுத்தான் குமார். "அதற்கு நான் வேலைக்காரியல்ல" வேலைக்காரி செய்வது காசுக்கு நீ செய்வது நான் கட்டிய தாலிக்கு" "உன்னேடு என்னுல்

வாழமுடியாது" என்ற வார்த்தையை மின்னல் வேகத்தில் வீசினுள் லலிதா. அதற்குப் பிறகு எதுவும் குமார் பேசவில்லை. உன்னோடு என்னுல் வாழமுடியாது என்ற வாக்கியம் அவனின் இதய அடித்தளம் வரை சென்றது, அந்த வாக்கியம் எந்த ஆண் மகனையும் விழிப்படையத்தான் செய்யும்.

அதன் பிறகு வாழ்க்கையில் விருப்பற்று மனம் போன போக்கிலே நடந்தான். மனைவி, வாழ்க்கை இவற்றைப்பற்றி எதுவும் நினைக்கவில்லை. குமார் தனக்கு சாப்பிட இல்லாவிட்டாலும் ஏழைகளுக்கு கொடுப்பதிலே இன்பம் கண்டான். ஏழைகளுக்கு அவன் இரங்கும் தன்மையைக்கண்ட வங்கியின் சக ஊழியர்கள் அவ்வூர் ஞானப்பிரகாசம் அனுதை விடுதிக்கு குமாரையே தலைவராக நியமித்து விட்டார்கள். வேலைக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரம் எல்லாம் அனுதை விடுதியிலேயே தன் பொழுதை கழிக்கத்தொடங்கினுன் குமார்.

ஏழைகளின் இன்னல் தீர்ப்பதில் அவனுக்கு ஓர் இன்பம் ஏற்பட்டது. அந்த இன்பத்தில் தன்மீது வெறுப்புக் கொண்ட தன் மனைவியை இழக்கத் துணிந்து விவாகரத்துக்குரிய ஆயத்தங்களைச் செய்துவிட்டான். அவனுக்கு அன்புகாட்ட ஒரு லலிதா இல்லாவிட்டாலும், "ஞானப்பிரகாச அனுதைகள் விடுதியில்" அவனுக்காகவே நூற்றுக் கணக்கான சிறுவர்களும், சிறுமிகளும் வயோதிபர்களும் இருக்கத்தானே செய்கிருர்கள்.

— முற்றும் —

# "பூவையர் பூங்கா"

**பாவையர்களே! இப்பகுதிக்காக உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

அனுப்பவேண்டிய முகவரி: **'பூவையர் பூங்கா'**

**"சங்கநாதம்"**
**R. V. K. விமலா பவனம்**
**தலைமன்னுர் துறை.**

சிறுகதை

# சங்கமம்

— திருமலை, சித்திரா நாகநாதன் —

மதுரா! மதுரா! என் வாய் ஓயாது முணு முணுக்கிறது உறவுகளை மறக்க முடிந்தோ முடியாமலோ, சந்தர்ப்ப சூழ்நிலையால், புதிய உலகிற்கு போய் விட்டாள் மதுரா! ஆனால் பழைய உறவு எப்படியம்மா மறக்கமுடியும். அன்றுமலர்ந்த ரோஜாப்போல் மணம் வீசிய மதுராவின் இளமை மழைக்கால மேகங்கள் அசைந்து செல்வதைப்போல் முதுகில் பரந்து நிற்கும் கூந்தல் அந்த வதனத்தின் சாந்தம் வேறு யாருக்கும் இருந்ததாக நான் அறிந்ததில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் அதே சாந்தம் நிலவும், மற்றவர் முகத்தை நிமிர்ந்து பார்க்க மாட்டாள் மதுரா. அவள் அடக்கமாக சேலை உடுத்தி ஆலயதரிசனத்திற்கு வருவாள். அவளது தெய்வீக கோலத்தை தரிசிப்பதற்காகவே நான் ஆலயத்திற்கு செல்வேன். பெரிய இடத்திற்கு பொருத்தமற்ற சுபாவம் அவளுக்கு நகையைக் கண்டாலே அவளுக்கு அலர்ஜி போலும் கழுத்தில் ஒரு கறுத்தமணி மாலை கைகள் வெறிச் என்றிருக்கும் இரு இமைகளும் பொருந்தும் இடத்தில் கறுப்புப் பொட்டு அதன்கீழே திருநீற்றுக்கீறு அவ்வளவுதான் அவளது மேக்கப். பணத்தை ஆளப் பிறந்த மதுரா விரும்பும் கோலம் இது. நான் அவள் பணத்தை விரும்பவில்லை அவள் இதயத்தில் மட்டும் பங்கு கேட்டேன், அதற்கு அவள் எடுத்த கால இடைவெளி இரண்டு வருடம்.

நான் அவள் அன்பைப் பெற பேயாய் அலைந்த அலைச்சல் அது அவளைத்தவிர வேறு யாருக்கும் புரியாது டெரீன், ஷபண் என்றெல்லாம் சேலைகளை தேடி ஓடும் பெண்களிடையே அவள் புதுமையானவள் அவளுக்கு வொயில் புடவை தான் பிடிக்கும் இன்றைய சராசரிப் பெண்களோடு அவளை ஒப்பிடும் போது ………… அவள் மிகமிக உயரத்தில் வைத்து பூஜிக்கப்பட வேண்டியவள் என்னைப் பொறுத்தவரை! எத்தனை பேருக்கு ஆரம்பத்தில் வியப்பு! "டேய்! மதுரா உன்னைக் காதலிக்கிறாளா? என்னடா கதை விடுறே! நம் பக்கூடியதா ஏதாவது சொல்லுடா" இப்படி என் நண்பர்கள் கேட்டிருக்கிறார்கள்.

அவள் பின்னால் சுற்றி அலுத்துப்போனபலர் உணர்ச்சிகளில்லாத ஜடம், நடைப்பிணம் இன்னும் எத்தனையோ பட்டப் பெயர்களை அவளுக்கு பரிசளித்திருக்கிறார்கள் அப்படிப்பட்ட மதுரா மனதில் இடம் பிடித்தவன் நான் என நினைக்கும் போது உலகமே என்

காலடியில் இருப்பதாக நினைப்பு அந்தவெற்றியை பெரிதாக் கொண்டாட எனக்குத்தான் எத்தனை ஆசை. ஆனால் மதுராவுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை என்னை பரிபூரணமாக நம்பினாள் மதுரா என்னோடு பழகும் ஒவ்வொரு நிமிடமும் அவளது பெண்மையைக் காத்துக் கொண்டவிதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

ஒரு நாள்... ... ... ... ... ...

அன்று மதுராவின் பிறந்தநாள் முதல் நாளே அவளிடம் கேட்டுவைத்திருந்தேன் என் மதுராக் கண்ணில்ல என்மேல உனக்கு உண்மையான அன்பிருந்தா நீ என்னோடு பீச்சுக்கு வரணும் ஒரு ஏழை பணம் கொடுக்காமல் சுதந்திரமாக போகக் கூடிய இடம் அது ஒன்றுதானே. ஏழை என்று என்னைக் குறிப்பிட்டது அவளை என்னமோ செய்திருக்க வேண்டும் "நான் உங்களோடு பீச்சுக்கு வரணும் அவ்வளவுதானே அதுக்காக இப்படிக் கதைக்கவேண்டுமா? பாசத்தோடு கூறினாள் மதுரா மற்றவர்களுக்காக மனம் நோகமுடியுமே, தவிர மற்றவர் மனதை நோக வைக்கத் தெரியாதவள் மதுரா! எப்படி அவள் வீட்டாருக்குச் சாட்டு சொல்லிவிட்டு வந்தாளோ அது அவளது கெட்டித்தனம்.

அவளோடு போய் அந்த ஒற்றைப் பனையடியில் அமர்கிறேன். இலைகள் ஒன்றுமில்லாமல் தன்னந்தனியாக மொட்டையாக நின்றாலும் காதல் அனுபவம் அந்த மரத்திற்கு அதிகம்தான் தினமும் போட்டி போட்டுக் கொண்டு வந்து முன்னரே இடம் பிடிக்கும் அளவிற்கு அந்த மரம் பிரபல்யமாய் இருந்தது. மதுரா வெள்ளை வொயிலில்சிவப்புநிற நட்சத்திரங்கள் போட்ட சேலையை அணிந் திருந்தாள்ஒற்றைப் பின்னலில் ஒரு மல்லிகைச் செண்டு ஒய்யாரமாய் அமர்ந்திருந்தது. நான் அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந் தேன்' அவள் மண்ணில் கோடுபோட்டு கொண்டிருந்தாள். "என் மதுராவுக்கு இனிய வாழ்த்துக்கள்" நான் கொண்டுவந்த பார்சலை அவள் மடியில் வைக்கிறேன். வியப்போடு பார்க்கிறாள் 'தாங்யூ' சொல்லிவிட்டு "பிரித்துப் பார்க்கட்டுமா?" என்னிடம் கேட்டாள்.

"பாரேன்? மதுரா" அவசரம் அவசரமாய் பிரித்தவள் நாணத்தில் முகத்தை முழங்காலில் பதிக்கிறாள். நான் குறும்போடு அவளைப் பார்க்கிறேன். ஒரு பெண்ணுக்கு வேண்டிய உடைகளில் அப்படியே ஒரு செற். சேலை மட்டும் கிளிப்பச்சை நிறத்தில் வெள்ளைப் புள்ளிகள். என் செலக்சன். "எதுக்கு இவ்வளவு சிரமப்பட்டு" அவள் கூறுகிறாள். "உன் பின்னால் அலைந்ததை விட, இது பெரிய சிரமமாய் இல்லை" ..... நான் சொல்கிறேன். இருவரும் அந்த ஜோக்கை நினைத்துச் சிரிக்கிறோம். கடலலைகளும் கூடவே சிரிக்கின்

றன. இப்ப என்னுடைய Present சொல்லிவிட்டு கேக்கை நீட்டு கிறுள். "ஊகம் நான் மறுக்கிறேன் உன் கையால் ஊட்டி விட்டால் தான் சாப்பிடுவேன். அடம்பிடித்தேன் நான். அவளுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை.

"பொல்லாத மனிதர் நீங்கள் !

ம் வாயைத் திறவுங்கோ" எனச் சொல்லிவிட்டு என் வாய்க்குள் வைக்கிருள். அப்படியே அந்தக் கரங்களைப் பற்றி என் இதழகளைப் பதிக்கிறேன், கையை உதறி எடுத்தவள் மீண்டும் தலையை முழங்காலில் பதிக்கிருள். ஏன் மதுரா என்னோடு கோபமா? நான் உன் கையைப் பிடிக்காமல் யார்பிடிக்கிறதாம்?" நான் ஆதங்கத்துடன் கேட்டேன். எனக்கு நீங்கள் உரிமையோட கையைப் பிடிக்கிறதுதான் பிடிக்கும். நாங்க பழகும்போது நம் இரண்டு பேருக்குள்ளும் ஒரு கட்டுப்பாடு வேணும். அது உரிய காலத்துக்குள்ள எல்லை மீறுகிறது எனக்குப் பிடிக்கல்ல" மெல்லமாகச் சொன்ளுள் மதுரா ! நான்புரிந்து கொண்டேன அவளை. அவள் பன்மடங்கு உயர்ந்துநின்றுள் என்முன்னே. அதன் பின்னே அவளை நான் தொட்டதே இல்லை.

பணக்காரர்களுக்கு ஏழை என்ருலே ஒரு அலர்ஜிதான்.என் இனிய மதுராவை ஒரு வனுக்குக் கட்டி வைக்கப்போகிருர்களாம். இப்போ நான் என்ன செய்யிறது. அவள் விசயத்தைச் சொன்னபோது தலை சுற்றியது. நான் ஒண்டிக் குடித்தனம் பண்ணும் அறைக்கு உன்னைக் கூட்டிப் போகட்டுமா? மதுரா ! உங்கப்பா மாதிரி பட்டும், சிசும் கொடுத்து பராமரிகக எனக்கு வழியில்லை. ஆனு உன்னைப் பட்டினிபோடாமல் காப்பாத்துகிறேன் மதுரா" அவன் கலங்கிய விழிகளுடன் கூறினுன்.

இல்லை!" காரும்,பங்களாவும் தராத வாழ்கைகநீங்கதருவீங்க! நிம்மதியான மனசுக்குப் பிடித்த வாழ்க்கை தான் வேண்டும்" இருவர் விழிகளும் கசிந்தன. அடுத்த நாள் மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ முடிவுசெய்துவிட்டு மதுரா போய்விட்டாள். என்ன செய்வது, எல்லாவற்றிற்கும் எல்லோரும் கொடுத்து வைப்பதில்லையே. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் அவஸ்தைப்படும் பலரை நாம் கண்கூடாகப் பார்க்கின்ரேம். பணத்துக்கும் பணத்துக்கும் முடிச்சுப் போட முனையும் இந்த சமுதாயம் சீர்திருத்தம் மட்டும் பேச வந்து விடுகிறது ஓ! இப்போ என்ன செய்வது; ஒன்றுக்கும் வழியில்லாத நான் அவளை அடைய ஆசைப்பட்டது நியாயமா? இன்றிரவு நிச்சயம் அவள் வருவாள். எந்த நிலையில் அவளை ஏற்றுக்கொள்வது. நேரம் மாலை ஐந்தைத் தாண்டி ஆறு

ஆகிறது. இரவுக்கும், பகலுக்கும் இடைப்பட்ட இதமான வேளை ......... இரவும், பகலும் சங்கமிக்கிறது. இரண்டு இதயங்கள் சங்கமிக்கத் துடிக்கின்றன. உறவை ஸ்திரப்படுத்த உபாயம் தேடுகின்றன. இருள் இந்த உலகை ஆட்கொள்ளுவதை சகிக்க முடியாது வெண்ணிலவு மெல்ல ஒளி பரப்புகிறது

நான் கோட்டை வாசல் பிள்ளையாரடியில் தவமிருக்கின்றேன். தெய்வமே என் தேவதையை எனக்கு தந்துவிடு தடங்கலில்லாத வழியை கொடு சித்தி விநாயகா உன்னால் தான் முடியும் இதயம் ஓலமிட எகிறிக்குதிக்கும் கடலலைகளைப் பார்த்தபடி நிலை கொள்ளாமல் வழியைப் பார்க்கிறேன் வெளிச்ச வீட்டின் ஒளி தோன்றித் தோன்றி மறைகிறது. என் மனதிலும் நம்பிக்கை ஒளி தோன்றித் தோன்றி மறைகிறது,

மணி எட்டு ......... இந்த நேரத்திலும் கடற்கரையில் சன நடமாட்டம் குறையவில்லை. மலை மேல் கோணேசர், அடிவாரத்தில் பிள்ளையார். இவர்களை நம்பித்தான் என்னவள் வருவாள் எனக் காத்திருக்கிறேன் இன்னும் வரவில்லை.

மணி ஒன்பது ..... இதயம் இரட்டிப்பாக அடிக்கிறது. என்னவளுக்கு ஏதும் ஆபத்தோ ........ பணக்காரர்களுக்கு ஆபத்தான காலமெனினும் மதுராவுக்கு நகை போடப் பிடிக்காது. எனவே ஆபத்து இல்லை

மணி பத்து ... ... ... ... இதயப்படபடப்பு அதிகரிக்கிறது என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. கடலலைகள் வரும் வேகத்தை விட என் எண்ண ஓட்டங்களின் வேகம் மிக அதிகரிக்கின்றது இன்னும் வரவில்லை என் மதுரா! ஏன்? அவளுக்கு பணக்காரப் புத்தி வந்துவிட்டதோ? என்னை ஏமாற்றி விட்டாளோ? இருக்காது அவளால் என்னை ஏமாற்ற முடியாது என் உள்ளுணர்வு திடமாகக் கூறியது. தெய்வமே என்னை ஏமாற்றாதே. ஒட்டுறவு இல்லாது வாழ்ந்த என் வாழ்க்கையில் மறு மலர்ச்சியை உண்டாக்கியவள் என் மதுரா. சோலையாக குலுங்கும் என் மனத் தோட்டத்தை பாலை வனமாக்காதே அவளுக்கு ஒன்றென்றால் .......... என்னால் நினைத்துப் பார்க்கமுடியாது தலையில் கையை வைத்தபடி கடலைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

மணி பதினொன்று .... .........

பன்னிரண்டு!

பொறுமையை இழந்து விட்டது என்மனம்! கால்கள் இடத்தை விட்டு நகர்கிறது உரியவளை தேடி நடக்கிறேன். அவள் வீட்டின்

முன்னே.......... பத்தடி தூரத்தில் நகர மறுக்கிறது என் கால்கள். அவளது வீட்டில் எல்லா லைட்களும் எரிகின்றன. வீட்டில் ஏதோ ஒரு பரபரப்பு.

"நீங்க சொன்னதால தான் அவள் போயிட்டாள்"

"என்னடி அந்த ஒட்டாண்டியை கட்டிக் கொள்வதானால் என் சவத்தை தாண்டிப்போய். தைரியமிருந்தால் கட்டிக் கொள் என்றேன் அதுக்கு மேலே அவளை அடிச்சேனா என் தலையில் பழியை போடுறியே? என் சொல்லை மீறி அலனோடு போக மாட்டாள். வேற ஏதும் ஆபத்தைத் தேடிக் கொண்டாளோ!" இருவரும் கையை தலையில் வைத்து அழுதழுது கிணறு தோட்டம் எல்லாப் பகுதிக்கும் போவது தெரிகிறது.

மதுரா உன் அப்பாவை மீறி என்னுடன் வர முடியாததால், என்னை விட்டு போக முடிவு செய்து விட்டாயா? நீ எனக்குக் கிடைக்காவிட்டாலும் நீ இந்த உலகில் வாழ வேண்டும். கோணேசர் மலையை நோக்கி என் கால்கள் விரைகின்றன. இராவணன் வெட்டை அண்மித்ததும் நிலை கொள்ளாமல் என் கண்கள் கொடுமையான கோபாவேசமான அலைகளினூடே என் மதுராவை தேடுகின்றது. அவள் இருக்கக் கூடாது என் மனம் பிரார்த்திக்கிறது.

இரவு விடிகிறது.

கீச், கீச் ஒளியோடு பச்சைக்கிளிக் கூட்டம் பறக்கிறது.
புள்ளி மானினம் துள்ளி ஓடுகின்றன!
மயில் ஒயிலாக நடந்து செல்கிறது.

மாதுமையம்மாள் தெற்கு வாசலில் அருளோடு காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறாள் எல்லாரையும் என் விழிகள் கெஞ்சிக் கேட்கின்றது என் மதுராவை கண்டீர்களா? ஐயர் வீட்டு ஆரவாரம் கேட்கிறது. சோர்ந்து போன நான் படியில் அமர்கிறேன். கதிரவன் என்னை துரத்தி விடுவது போல சுட்டெரிக்கும் கதிர்களை என் மேல் வீசுகின்றான் தூரத்தில் கடலில் ஏதோ மிதப்பதாக தெரிகிறது. கருங்கற்களின் மேல் பேரலைகள் மோதுகின்றன வெள்ளை வொயில் சேலை! "ஓ! மதுரா மதுரா!!" மணலில் சாய்ந்தது தெரியும் அதன் பின்னர் hospital ல் இருந்து வீட்டிற்கு வந்து ஐந்து நாட்கள்.

மொத்தத்தில் மதுரா போய் பத்து நாட்களாகிவிட்டது. நான் தினமும் பல மணி நேரம் கடற்கரையில் செலவு செய்

கிறேன் கேடு கெட்ட சமுதாயக் கோட்பாடுகளை தாங்க முடியாமல் ஒரு உயிர் கூட்டை விட்டு பிரிந்து போய் விட்டது. மண் வெட்டியை தூக்கி வியர்வை சிந்த உழைப்பவனும் தன் அறிவுத் திறனால் உழைப்பவனும், ஏமாற்றிப் பிழைக்காதவனும் தான் இந்தச் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள். இவர்களிடையே என் மதுரா இதயமுள்ள ஏழை அந்த ஆத்துமா இரவும் பகலும் சங்கமிக்கும் நேரம் என்னோடு சங்கமிக்கிறது. நுரை பொங்கும் அலைகளுடாக வந்து என் இதயத்தை வருடி விடுகிறது. இரு மனித உடல்களை பிரிக்கும். ஆற்றல் வேண்டுமானால் இந்த பணத்திற்கு இருக்கலாம். மனித உணர்வுகள் எவ்வளவு மென்மையானவை அவற்றை மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவனுக்குள்ளே சில மிருக உணர்வுகள் புகுந்து கொள்கின்றனவோ, ஏழையோடு உறவு கொண்டாட மறுக்கும் சில சமுதாய புல்லுருவிகள் அவள் கால மாற்றத்தால் உயர்வடைந்து விட்டால். எத்தனை உறவுகள் புதிது புதிதாய் முளைத்து விடுகின்றன அவை உள்ளன்போடு பிறந்த உறவுகளா? வெறும் போலி உறவுகள்!

இந்த உலகில் யாரை நம்புவது எனக்கு இந்த ஏமாற்றுக் கார உலகத்தில் போலியாக நடிக்கும் இந்த உலகத்தில் வாழப் படிக்கவில்லை. உருவமாயும் என் மதுரா அருவமாயும் இருப்பதால் ஏதோ எனக்குள் ஒரு உறுத்தல்

இந்தப் போலி உடலை அலைகள் விளையாடட்டும் அதன் பின்னே.........இந்த உடல் ஆழக் கடல் மீன்களுக்கு இரையாகட்டும். என் ஆத்மா மட்டும் உரியவளோடு சேர்ந்து விடட்டும்.

(முற்றும்)

---

## நேயர் அரங்கம்

இப்பகுதிக்காக மடல்களை அனுப்ப விரும்பும் நேயர்கள் சங்கநாத இதழில் நிலவுகின்ற குறைகள் நிறைகள் மேலும் புகுத்தவேண்டிய அம்சங்களை குறித்து அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

**நேயர் அரங்கம் "சங்க நாதம்"**
**R. V. K. விமலா பவனம்**
**தலைமன்னார் துறை.**

## அடுத்த இதழில்

★ சிரேஸ்ட அறிவிப்பாளர்

இராஜேஸ்வரி சண்முகத்தின் பேட்டி

★ எஸ். குணரட்ணம் எழுதும்

இலக்கியத்தில் தூது

★ இசையமைப்பாளர்

மோகன்ராஜுடன் ஓர் சந்திப்பு

★ எஸ். உலகநாதனின்

வர்த்தகம் கற்போம்

★ திருச்சி வசந்தி சிவகுமாரின்

தமிழக நட்சத்திரங்களைச் சந்தியுங்கள்.

இன்னும் பற்பல